ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2075/15 - 2018 ජූනි මස 11 වැනි සඳුදා - 2018.06.11

*2075/15 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 4/81* (VI)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*24இ மற்றும் 24ஈ ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 24இ என்னும் பிரிவினாலும் மற்றும் 24ஈ என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.

(அ) இதற்கான அட்டவணையில் எந்தக் காணிப் பிரதேசத்தின் எல்லைகள் விவரிக்கப்பட்டுள்ளனவோ அந்தக் காணிப் பிரதேசம், மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சூழற் பாதுகாப்புப் பிரதேசமொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், "பன்சலதென்ன - மௌஸ்ஸாவ சூழற் பாதுகாப்புப் பிரதேசம்" எனவழைக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இக்கட்டளை வலுவிலிருக்கும் காலம் வரை,-

(i) மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவுள்ள மேற்கூறப்பட்ட பன்சலதென்ன - மௌஸ்ஸாவ சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள்ளான ஏதேனும் திட்டமிடற் செய்திட்டம் அல்லது கருத்திட்டம், அது ஆக்கப்பட்ட திகதியிலிருந்து தொழிற்படாதொழிதல் வேண்டும் ;

(ii) அதிகாரசபை தவிர்ந்த ஆளெவரும், மேற்கூறப்பட்ட பன்சலதென்ன - மௌஸ்ஸாவ சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லைகளினுள் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தலோ அல்லது ஏதேனும் பணியை நிறைவேற்றுதலோ ஆகாது ; அத்துடன்

(iii) மேற்கூறப்பட்ட பன்சலதென்ன - மௌஸ்ஸாவ சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள்ளான ஏதேனும் காணிப் பிரதேசத்தை ஏதேனும் செயற்பாட்டுக்காகப் பயன்படுத்துதல் முழுமையாகத் தடை செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) கீழே தரப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டுள்ள கண்காணிப்புக் குழுவொன்று, பன்சலதென்ன - மௌஸ்ஸாவ சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தைக் கண்காணித்தல் வேண்டுமென்பதுடன், அதன் பேணிக்காப்பு மற்றும் நிலைபெறுதகு முகாமை என்பன மீது அதிகார சபைக்கு விதப்புரைகளைச் செய்தலும் வேண்டும் :-

(i) பணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள அதிகாரசபையின் பிரதிநிதியொருவர் ; அவரே குழுவின் தவிசாளராகச் சேவையாற்றுதல் வேண்டும் ;

(ii) மாத்தளை மாவட்டச் செயலகத்தின் பிரதிநிதியொருவர் ;

(iii) உக்குவெல மாவட்டச் செயலகத்தின் பிரதிநிதியொருவர் ;

(iv) உக்குவெல பிரதேச சபையின் பிரதிநிதியொருவர் ;

(v) காடு பேணுதல் திணைக்களத்தின் பிரதிநிதியொருவர் ;

(vi) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதிநிதியொருவர் ;

(vii) பெருந்தோட்ட அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(viii) அல்கடுவப் பெருந்தோட்டங்கள் லிமிற்றெற்றின் பிரதிநிதியொருவர் ;

(ix) தேசியக் கட்டிட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பின் பிரதிநிதியொருவர் ;

(x) கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(xi) பிரதேசத்தில் தொழிற்படுகின்ற சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் பிரதிநிதியொருவர்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக, "அதிகாரசபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகார சபை என்று பொருளாகும்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2018, யூன் 05.

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில், உக்குவெல பிரதேச செயலகத்தின் தொம்பகஸ்தெனிய - E345A மற்றும் ஹலங்கொட - E347A கிராம அலுவலர் பிரிவுகளினுள் அமைந்துள்ளதும், 2014.06.17 ஆந் திகதிய இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் மா 1620 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், பரப்பளவில் 103.4614 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதும், பன்சலதென்ன - மௌஸ்ஸாவ சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தைக் கொண்டதும், இதன்கீழ் தரப்பட்டுள்ள படத்தில் விவரிக்கப்பட்டதும், பின்வரும் எல்லைகளையுடையதுமான மொத்தக் காணிப்பரப்பின் எல்லைகள் :-

வடக்கு : அல்கடுவப் பெருந்தோட்டங்கள் லிமிற்றெற்றின் சிறப்புரிமையின்கீழ் காணித்துண்டங்கள் இல. 1, 2 மற்றும் மௌஸ்ஸகொல்லவத்த ;

கிழக்கு : அல்கடுவப் பெருந்தோட்டங்கள் லிமிற்றெற் மற்றும் காணிச்சீர்த்திருத்த ஆணைக்குழுவின் சிறப்புரிமையின்கீழ் காணித்துண்டம் இல. 2 மற்றும் மௌஸ்ஸகொல்லவத்த ;

தெற்கு : அல்கடுவப் பெருந்தோட்டங்கள் லிமிற்றெற்றின் சிறப்புரிமையின்கீழ் காணித்துண்டம் இல. 8 மற்றும் மௌஸ்ஸகொல்லவத்த, அல்கடுவப் பெருந்தோட்டங்கள் லிமிற்றெற்றின் சிறப்புரிமையின்கீழ் காணித்துண்டம் இல. 7, பன்சலதென்னவத்த மற்றும் காணித்துண்டம் இல. 6 ;


மேற்கு : அல்கடுவப் பெருந்தோட்டங்கள் லிமிற்றெற்றின் சிறப்புரிமையின்கீழ் பன்சலதென்னவத்த, காணிச்சீர்த்திருத்த ஆணைக்குழுவின் சிறப்புரிமையின்கீழ் காணித்துண்டம் இல. 5, பன்சலதென்னவத்த காணித்துண்டம் இல. 4.

# பன்சலதென்ன - மௌஸ்ஸாவ - சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தின் அமைவிடப்படம்

மாகாணம் - மத்திய
மாவட்டம் - மாத்தளை
பி.செ.பிரிவு - உக்குவெல

கி.அ. பிரிவு - தொம்பகஸ்தெனிய E345A
ஹலங்கொட E347A
விஸ்தீரணம் - 103.4614 ஹெ.




**இலங்கை நிலஅளவைத் திணைக்களம் / நிலஅளவைவரைபடம் இல ஓ 1620:**
**தேதி: 2014.06.17**

*06-964*